# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகள் சட்டம்

**(தமிழ்நாடு சட்ட எண் 35/1997)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Lifts and Escalators Act, 1997

**(Tamil Nadu Act No.35 of 1997)**

(as on 31st October, 2023)


தமிழாக்கம் :

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகள் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 35/1997)


பிரிவு பொருளடக்கம்

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.
3. மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகளின் ஆய்வாளர் நியமனம்.
4. மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டுகள் அமைப்பதற்கான அனுமதி.
5. மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டை இயக்கி வருவதற்கான உரிமம்.
6. தற்போது இருந்துவருகின்ற மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகளைப் பொறுத்த வகைமுறை.
7. புதுப்பித்தல்.
8. உரிமத்தை நீக்கி விடுவதற்கோ அதன் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கோ அதிகாரம்.
9. மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டமைப்புக்குக் கூடுதலாகச் சேர்த்தல் அல்லது அதனை மாற்றியமைத்தல்.
10. மின்தூக்கியையும் இயங்கும்படிக்கட்டையும் நிறுவுதல், பராமரித்தல், ஆய்வு செய்தல், சோதனையிடுதல் ஆகியவை தகுதிவாய்ந்த நபர்களிடம் ஒப்படைக்கப்படுதல்.

11. நுழைவதற்கான அதிகாரம்.

12. ஆய்வு செய்வதற்கு உரிமையாளர் வசதி செய்து கொடுத்தல்.

13. விபத்துகளைப் பற்றிய அறிக்கை.

14. ஆய்வாளருக்கு உதவி புரிதல்.

15. தண்டம்.

16. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்.

17. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.

18. அறிவிப்புகள், ஆணைகள் அல்லது ஆவணங்களைச் சார்வு செய்தல்.

19. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

20. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

21. காப்புரை.

22. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

23. விதிகள், ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் சட்டமன்றப்பேரவை முன்பு வைக்கப்படுதல்.

# 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகள் சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 35/1997

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 1997ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் குறித்தசில வகையான [1][மின்தூக்கிகள், இயங்கும்படிக்கட்டுகள் மற்றும் இயந்திரங்கள்] தொடர்பான கருவிகலங்கள் அனைத்தும் அமைக்கப்படுவதையும் பேணிவரப்படுவதையும், அவை பாதுகாப்பாகச் செயல்படுவதையும் முறைப்படுத்துவதற்கு வகை செய்வதற்கும், அவற்றோடு தொடர்புடைய விவரங்களுக்கு வகை செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் நாற்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.**– (1) இந்தச் சட்டம், 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு [2][மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகள்] சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கை மூலம் குறிக்கக் கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 2ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 3ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**2. பொருள்வரையறைகள்**.–(1) இந்தச்சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

[1][(a) "தகுதி வாய்ந்த நபர்" என்பது, பிரிவு 10இன் உட்பிரிவு (1)இன்படி முதன்மை ஆய்வாளரால் அனுமதியளிக்கப்பட்ட நபர் அல்லது நிறுமம் எனப் பொருள்படும்].

(aa) "இயங்கும்படிக்கட்டுகள்" என்பது, பயணிகளை மேலே ஏற்றிச் செல்வதற்காகவோ கீழே இறக்குவதற்காகவோ பயன்படுத்தப்படும் விசையினால் இயக்கப்படும் சாய்ந்த தொடர்ச்சியான படிக்கட்டுவழி எனப் பொருள்படும்;

(aaa) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்];

(b) "ஆய்வாளர்" என்பது, பிரிவு 3இன்படி நியமிக்கப்பட்டுள்ள [1][மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகள் ஆய்வாளர்] என்று பொருள்படும்;

(c) "மின்தூக்கிகள்" என்பது, பயணியரை அல்லது சரக்குகளை அல்லது பயணியரையும் சரக்குகளையும் ஒருசேர ஏற்றிச் செல்வதற்காக வடிவமைக்கப்பட்டதும், பெரும்பாலும் செங்குத்தான திசையில் நகர்வதும், சக்தியினால் இயங்குகின்றதுமான சுமைகலம் அமையப் பெற்ற உயரத் தூக்கும் இயந்திர நுட்ப அமைப்பு எனப் பொருள்படும். ஆனால் 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மையச் சட்டம் LXIII/1948) பொருந்துகின்ற பளுதூக்கியையோ மின்தூக்கியையோ உள்ளடக்காது.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 4ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**விளக்கம்**.– இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, 'சக்தி' என்பது, மின்சக்தி அல்லது இயந்திரத்தின் மூலம் செலுத்தப்படக்கூடியதும் மனிதராலோ விலங்கினத்தாலோ வெளிப்படுத்தப்படாததுமான ஏதேனும் பிற சக்தி எனப் பொருள்படும்;

(d) "மின்தூக்கிச் சுமைகலம்" என்பது, மின்தூக்கி ஒன்றுக்கான கூண்டு அல்லது சுமைகலம் எனப் பொருள்படுவதோடு, அதன் தரையை அல்லது தரைமேடையை அல்லது சுமைகலத்தின் சட்டம், தொங்கு கயிறு, சுற்றிலும் மூடி அடைக்கப்பட்டுள்ள கட்டமைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கும்;

(e) "மின்தூக்கி அமைவு" என்பது, மின்தூக்கி சுமைகலம், மின்தூக்கி செல்வழி, மின்தூக்கி செல்வழி அடைப்பிடம், மின் தூக்கியை இயக்குகின்ற இயந்திர நுட்பம் ஆகியவற்றையும், மின்தூக்கி செயற்படுவதுடன் நேரிடையாகத் தொடர்புடைய கயிறுகள், கம்பிவடங்கள், கம்பிகள், இயந்திரச் சாதனங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும்;

(f) "மின்தூக்கி செல்வழி" என்பது, மின்தூக்கி சுமைகலம் செல்கின்ற செங்குத்தான வழி எனப் பொருள்படும்;

(g) "மின்தூக்கி செல்வழி அடைப்பிடம்" என்பது, மின்தூக்கி செல்வழியைச் சுற்றிலுமுள்ள அல்லது அதை அடைத்துக் கொண்டுள்ள நிரந்தரமான நிலையான கட்டமைப்பு எதுவும் எனப் பொருள்படும்;

(h) "உரிமையாளர்" என்னும் சொல்லானது.–

(i) ஒரு குத்தகையாளரை;

(ii) ஓர் உரிமம் பெற்றவரை;

(iii) உடைமையிலுள்ள ஓர் அடைமானம் பெற்றவரை; மற்றும்

(iv) [1][மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு] ஒன்று அமைக்கப்–பட்டிருக்கின்ற இடத்தின் உடைமையும் அந்த இடத்தின் அலுவல்கள் மீதான கட்டுப்பாடும் எந்த நபரிடம் அல்லது அதிகாரஅமைப்பிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றதோ அந்த நபர் அல்லது அதிகார அமைப்பு, ஒரு மேலாண்மைப் பொறுப்பாட்சியர், ஒரு முகவர், ஓர் அலுவலர், மேலாளர், கண்காணிப்பாளர், செயலாளர் அல்லது பிற எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அத்தகைய நபரையோ அதிகாரஅமைப்பையோ,

உள்ளடக்கும்;

3. [2]**[மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகளின் ஆய்வாளர்] நியமனம்.–** இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆய்வாளர்களாக இருப்பதற்கு வகுத்துரைக்கப்படும் தகுதிகளைப் பெற்றிருக்கின்ற நபர் ஒருவரையோ ஒருவருக்கு மேற்பட்ட நபர்களையோ, அறிவிக்கையின் வாயிலாக அரசு நியமனம் செய்து, அவர்களுடைய அதிகார வரம்பிற்குள் உள்ள வட்டார எல்லைகள் எவை என்பதை அத்தகைய அறிவிக்கையில் குறிப்பிடலாம்.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 4ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 5ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**4. [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டுகள்] அமைப்பதற்கான அனுமதி.**–(1) இந்தச் சட்டம் செயற்படத் தொடங்கிய நாளன்றும் அதுமுதற்கொண்டும், ஓர் இடத்தின் உரிமையாளர் எவரும், இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள அனுமதியின்படியும், அதற்கு இணங்கியவாறும் அல்லாமல் அந்த இடத்தில் [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] ஒன்றை அமைத்தல் கூடாது.

(2) [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டு] அமைப்பதற்கான அனுமதி கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும், ஆய்வாளரிடம் எழுத்து மூலமாகச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் [1][வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடன்] சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அதில் பின்வரும் விவரங்கள், அதாவது:–

(a) [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] ஒன்றின் வகை;

(b) [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] ஒன்றின் கணிக்கப்பட்ட வேகத்தின் உச்சஅளவு;

(c) தயாரிப்பாளர்களாலோ வடிவமைப்பாளர்–களாலோ கணிக்கப்பட்ட எடையின் கொள்திறன் அளவு;

(d) மின்தூக்கியை இயக்குபவருடன் சேர்த்து மின்தூக்கி ஏற்றிச் செல்லக்கூடிய பயணியரின் எண்ணிக்கையின் உச்சஅளவு;

(e) உச்சஅளவு சுமையை ஏற்றிச் செல்லும் மின்தூக்கியின் மொத்த எடை (சுமை கலத்தின் எடையுடன் சேர்த்து அனுமதிக்கத்தக்க உச்சஅளவு சுமை);

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 6ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(f) எதிரிடையான எடை;

(g) ஆதாரமாயிருக்கின்ற கம்பிவடத்தின் எண்ணிக்கை, விவரம், எடை மற்றும் அளவு;

(h) கீழ்தளத்தில் இருக்கின்றபோது சுமைகலத்தின் அடிப்பகுதியிலிருந்து தரைக்குழியின் ஆழம்;

[1][(i) உத்தரங்களின் எடை மற்றும் உருவஅளவுடன் சேர்த்து மேற்புறக் கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றி வகுத்துரைக்கப்படும் விவரங்கள்;

(j) இயங்கும்படிக்கட்டிற்கான சாய்வு அளவு;

(k) இயங்கும்படிக்கட்டிலுள்ள கைப்பிடிகள், படிகள், நடைமிதிப்புகள், படியிடைமேடை, சீப்பு போன்ற தட்டுகள், தாங்குச் சட்டங்கள் அல்லது இரும்புப்பாலங்கள் மற்றும் படிக்கட்டு உருளை ஆகியவற்றின் விவரங்கள்;

(l) இயங்கும்படிக்கட்டுகள் மீதான பளு மதிப்பீடு கிலோகிராமில்;

(m) மின்தூக்கியிலோ அல்லது இயங்கும் படிக்கட்டிலோ நிலையான பளுவின் அடிப்படையிலான பாதுகாப்பு ஏற்பாடு; மற்றும்

(n) வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள்,]

போன்றவை அடங்கியிருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், ஆய்வாளர், தான் தேவையெனக் கருதுகின்ற விசாரணையைச் செய்த பிறகு அனுமதி வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம் வழங்கப்பட்ட அனுமதி ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 6ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

படும் படிவத்திலும், வகுத்துரைக்கப்படும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இருத்தல் வேண்டும் மற்றும் அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவிற்குச் செல்லத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3)இன்படி அனுமதி வழங்கப் பட்டிருக்கிற ஓர் இடத்தின் உரிமையாளர் ஒவ்வொருவரும், அத்தகைய [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டை] அமைப்பதற்கான பணி முடிவடைந்த பிறகு ஒரு மாதங்களுக்குள் வகுத்துரைக்கப்படும் படிவத்தில், பணி முடிவடைந்ததற்கான அறிக்கை ஒன்றை ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (3)இன்படி அனுமதி வழங்க ஆய்வாளர் மறுக்கும் போது, அவர் அத்தகைய மறுப்புக்கான காரணத்தை எழுத்து மூலம் கொடுத்தல் வேண்டும்.

**5.** [2]**[மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டை] இயக்கி வருவதற்கான உரிமம்.–** (1) ஓர் இடத்தின் உரிமையாளர் எவரும், உரிமம் ஒன்றின்படியோ அல்லது அதற்கிணங்கவோ அல்லாமல், அந்த இடத்தில் [2][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] எதனையும் இயக்கிவருதலோ இயங்கிவரச் செய்தலோ அல்லது இயக்கி வருவதற்கு அனுமதித்தலோ கூடாது.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 6ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 7ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(2) உட்பிரிவு (1)இன்படியான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் ஆய்வாளரிடம் எழுத்து மூலமாகச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், [1][வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடன்] சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், ஆய்வாளர், தேவையெனத் தான் கருதுகின்ற விசாரணையைச் செய்த பிறகு உரிமத்தை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்.

(4) உட்பிரிவு (3)இன்படி வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் வகுத்துரைக்கப்படும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இருத்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (3)இன்படி வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், அது வழங்கப்பட்ட தேதியில் இருந்து [மூன்று ஆண்டுகள் கால அளவிற்குச்] செல்லத்தக்கதாக இருத்தல் வேண்டும் மற்றும் ஆய்வுக்குப் பிறகு, வகுத்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில் [ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் புதுப்பிக்கத் தக்கதாகும்].

(6) உட்பிரிவு (3)இன்படியான உரிமம் ஒன்றை ஆய்வாளர் வழங்க மறுக்கும் போது, அந்த மறுப்புக்கான காரணத்தை அவர் எழுத்து மூலம் கொடுத்தல் வேண்டும்.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 7ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**6. தற்போதிருந்து வருகின்ற [1][மின்தூக்கிகள் மற்றும் இயங்கும்படிக்கட்டுகளைப்] பொறுத்த வகைமுறை.–** (1) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், அவை உட்பிரிவு (2)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு, மின்தூக்கி ஒன்று அமைக்கப்பட்டு, இந்தச் சட்டம் செயற்படத் தொடங்கிய தேதிக்கு உடன்முன்பு இயக்கப்பட்டு வருகின்ற இடம் ஒன்றின் உரிமையாளர் ஒவ்வொருவரும், அந்த இடத்தில் அந்த மின்தூக்கியைத் தொடர்ந்து இயக்கி வரலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி மின்தூக்கியைத் தொடர்ந்து இயக்கி வருவதற்கு உரிமையுடைய நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டம் செயற்படத் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு மாத காலம் முடிவடைந்த பின்னர், அந்த மின்தூக்கியைப் பொறுத்து, அவர், பிரிவு 5இன்படி உரிமம் ஒன்றைப் பெற்றால் அன்றி, அதனைத் தொடர்ந்து இயக்கிவருதல் கூடாது.

[2][(2–A). 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (இதன்பின்பு இந்த உட்பிரிவில் இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதி எனக் குறிப்பிடப்படும்) தொடக்கத் தேதிக்கு உடன் முன்பு, இயங்கும்படிக்கட்டு நிறுவப்பட்டிருந்து இயக்கப்பட்டு வருகிற, அந்த இடத்தின் உரிமையாளர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு மாத கால அளவுக்கு அத்தகைய இயங்கும்படிக்கட்டு இயங்குவதைத் தொடரலாம் மற்றும் அத்தகைய

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 8ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 8ஆல் புகுத்தப்பட்டது.

இயங்கும்படிக்கட்டைப் பொறுத்து, பிரிவு 5இன்படி அவர் உரிமம் ஒன்று பெற்றாலன்றி, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுற்ற பின்பு அத்தகைய இயங்கும்படிக்கட்டுகள் தொடர்ந்து இயங்குதல் கூடாது].

(3) [1][உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (2–A)] இன்படியான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் [வகுத்துரைக்கப்படும் அத்தகைய கட்டணத்துடன்] சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**7. புதுப்பித்தல்.**–(1) இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள உரிமம் ஒன்று புதுப்பிக்கப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்த உரிமத்தின் காலஅளவு முடிவடையும் தேதிக்கு முன்பு, மூன்று மாதங்களுக்குக் குறையாத காலஅளவுக்குள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், கூடுமான அளவுக்கு, பிரிவு 5இன்படி உரிமம் வழங்குவது தொடர்பாகப் பொருந்துவன போன்று, உரிமம் புதுப்பிப்பது தொடர்பாகவும் பொருந்துதல் வேண்டும்.

**8. உரிமத்தை நீக்கிவிடுவதற்கோ அதன் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கோ அதிகாரம்.–**(1) (i) உரிமம் எதுவும் திரித்துக்கூறியதன் பேரிலோ மோசடியாகவோ பெறப்பட்டிருக்கிறது; அல்லது

(ii) உரிமம் பெற்றவர் இந்தச் சட்டத்தின் ஏதேனும் வகைமுறைகளை அல்லது அதன்படிச் செய்யப்பட்டுள்ள விதிகளை அல்லது உரிமத்தின் வரையறைகளில்

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 8 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

மற்றும் நிபந்தனைகளில் ஏதொன்றையும் மீறியுள்ளார் அல்லது அதற்கிணங்கி நடக்கத் தவறியுள்ளார்; அல்லது

(iii) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப் பட்டுள்ள ஓர் ஆணையை அல்லது இச்சட்டத்தின்படிச் செய்யப்பட்டுள்ள விதிகளை உரிமம் பெற்றவர் மீறியுள்ளார் அல்லது அதற்கிணங்கி நடக்கத் தவறியுள்ளார்; அல்லது

(iv) எந்த நோக்கத்திற்காக உரிமம் வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக, [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] இனிமேலும் பாதுகாப்பாக இயங்க முடியாது,

என ஆய்வாளருக்குத் தோன்றுமானால், அவர், உரிமம் வைத்திருப்பவருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்றைக் கொடுத்த பிறகு, அந்த உரிமத்தை நீக்கிவிடலாம் அல்லது அதன் செயற்பாட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(2) ஆய்வாளர், இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள உரிமம் எதுவும் நீக்கத்தக்கதாகக் கருதுவாரானால், உரிமம் நீக்கம் செய்யப்படும் வரையில், எழுத்துமூலம் காரணங்களைப் பதிவு செய்து, உரிமம் எதையும் செயற்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்; மற்றும் அத்தகைய ஒரு நிகழ்வில் கேட்கப்படுவதற்கான வாய்ப்பினைக் கொடுக்கத் தேவையில்லை.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 9ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(3) ஆய்வாளர், தன்னிச்சையாக அல்லது விண்ணப்பத்தின்பேரில், உட்பிரிவு (1)இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதையும்,–

(i) பதிவுருவைப் பார்த்த உடனேயே வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு தவறு அல்லது பிழையின் அடிப்படையில்; அல்லது

(ii) அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர், புதிய விவரங்கள் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் அடிப்படையில்;

(iii) போதிய பிற காரணம் எதற்காகவேனும்,

மறு ஆய்வு செய்யலாம்:

**வரம்புரை**: ஆனால், ஆய்வாளர், நபர் எவருக்கும் பாதகமாக, இந்த உட்பிரிவின்படியான ஆணை ஒன்றை, தம் தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பினை அந்த நபருக்குக் கொடுத்தாலன்றி பிறப்பித்தல் கூடாது.

9. [1]**[மின்தூக்கி மற்றும் இயங்குபடிக்கட்டுக்குக்] கூடுதலாகச் சேர்த்தல் அல்லது அதனை மாற்றியமைத்தல்.–** ஆய்வாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியைப் பெறாமல், பிரிவு 11இன் உட்பிரிவு (2)இன்படி தேவைப்படுபவை இல்லாமல் பிறவாறு [1][மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டமைப்புக்குக்] கூடுதலாக எதனையும் சேர்த்தலோ அதனை மாற்றியமைத்தலோ கூடாது.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 10ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

[1][10. **மின்தூக்கியையும் இயங்கும்படிக்கட்டையும் நிறுவுதல், பராமரித்தல், ஆய்வு செய்தல், சோதனையிடுதல் ஆகியவை தகுதி வாய்ந்த நபர்களிடம் ஒப்படைக்கப்படுதல்.–** (1) தலைமை ஆய்வாளர், வகுத்துரைக்கப்படும் வரையுறைகள் மற்றும் நிபந்தனைகளின்பேரில், மின்தூக்கி ஒன்றை அல்லது இயங்கும்படிக்கட்டு ஒன்றை நிறுவுதல், பராமரித்தல், ஆய்வுசெய்தல், சோதனையிடுதல் ஆகிய நோக்கங்களுக்கு எந்தஒரு நபருக்கும் அல்லது நிறுமத்திற்கும் அனுமதியளிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி அனுமதி அளிக்கப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடன் சேர்த்து தலைமை ஆய்வாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) நபர் எவரும், வகுத்துரைக்கப்படும், தகுதிகளையும் பிற கட்டாயத் தேவைகளையும் நிறைவு செய்தாலன்றி, உட்பிரிவு (1)இன்படி அனுமதியளிக்கப் படுதல் கூடாது:

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,–

(a) "நிறுமம்" என்பது, கூட்டுருமக் குழுமம் எதுவும், எனப் பொருள்படும், மற்றும் அது, பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்;

(b) "தலைமை ஆய்வாளர்" என்பது, அரசு தலைமை மின்ஆய்வாளர் எனப் பொருள்படும்.]

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 11ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**11. நுழைவதற்கான அதிகாரம்.**–(1) ஆய்வாளர் அல்லது பிரிவு 14இன்படி அவருக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நபர் எவரும், உரிமையாளருக்கு நியாயமான அறிவிப்புக் கொடுத்த பின்னர், எந்த நேரத்திலும், [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டு] ஒன்று அமைக்கப்படுகின்ற அல்லது இயக்கப்பட்டு வருகின்ற எந்த இடத்திலும் அல்லது பிரிவு 4இன்படி அனுமதி பெறுவதற்காகவோ, பிரிவு 5இன்படி உரிமம் பெறுவதற்காகவோ விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டு இருக்கின்ற இடத்தின் தொடர்பாக, அந்த இடத்தை, மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு கட்டமைப்பதை அல்லது நிகழ்விற்கேற்ப நிறுவப்படுவதை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக நுழையலாம். பிரிவு 14இன்படி ஆய்வாளருக்கு உதவி புரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நபர், அந்த ஆய்வைச் செய்த பிறகு, ஆய்வு செய்யப்பட்ட [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] அமைப்பின் நிலைமை தொடர்பாக ஓர் அறிக்கையினை, இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்காக ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) அந்த ஆய்வின் பேரில், இடம் எதிலுமுள்ள [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] அமைப்பு எதுவும் பாதுகாப்பான நிலையில் இல்லை என ஆய்வாளர் கருதுவாரானால், அவர், எழுத்து மூலமான ஆணையினால், அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட காலஅளவிற்குள் அந்த [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டை] அவர் தேவை எனக் கருதும் பழுதுகளைப் பார்க்குமாறு அல்லது அதனை மாற்றி அமைக்குமாறு இடத்தின் உரிமையாளரைப் பணிக்கலாம் மற்றும் தேவைப்பட்டால் அவ்வாறு பழுதுபார்க்கப்படுகின்ற வரையிலோ, மாற்றம்

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 12ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

செய்யப்படுகின்ற வரையிலோ அந்த [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] செயற்படுவதை நிறுத்தி பணிப்புரை வழங்கலாம். உரிமையாளர், அதன் பேரில், குறிப்பிடப்பட்ட காலஅளவிற்குள், அத்தகைய பணிப்புரை எதற்கும் இணங்கி நடத்தல் வேண்டும் என்பதோடு, உடனடியாக அத்தகைய பணிப்புரைக்கு அவர் இணங்கி நடந்தது குறித்து, எழுத்து மூலமாக ஆய்வாளருக்கு அறிவித்தலும் வேண்டும்.

[2][(2–A) உட்பிரிவு (2)இன்படி வழங்கப்பட்ட பணிப்புரை நிறைவேற்றப்படாத மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு எதுவும் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் காணப்படும் நிகழ்வில், அத்தகைய மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு, உடனடியாக ஆய்வாளரால் நிறுத்தப்படுவதற்கு ஆணையிடப்படுதல் மற்றும் மூடி முத்திரையிடப்படுதல் வேண்டும்].

(3) [1][உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (2–A) இல்] செய்யப்பட்ட ஆணை அல்லது பணிப்புரை எதனாலும் குறையுற்ற நபர் எவரும், அந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக, இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்படும் மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(4) உட்பிரிவு (3)இன்படி மேல்முறையீடு எதுவும் செய்து கொள்ளப்பட்டிருந்த போதிலும், உட்பிரிவு (2) இன்படி [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] செயற்படுவதை நிறுத்தி வைப்பதற்கான பணிப்புரை எதற்கும், மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு, அத்தகைய

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 13ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 12 ஆல் புகுத்தப்பட்டது.

பணிப்புரை செயற்படுவதைத் தடைசெய்து, நிறுத்தி வைத்திருந்தாலன்றி, இணங்கி நடத்தல் வேண்டும்.

(5) மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிடம் மேல்முறையீடு செய்து கொள்ளப்படுவதற்கு உட்பட்டு, உட்பிரிவு (2)இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையானது அறுதியானதாகும்.

**12. ஆய்வுசெய்வதற்கு உரிமையாளர் வசதி செய்து கொடுத்தல்.–** பிரிவு 11இன் உட்பிரிவு (1)இன்படி ஆய்வாளரோ அல்லது பிரிவு 14இன்படி நியமிக்கப்பட்டுள்ள நபரோ, அந்தப் பிரிவின்படி பணியை அவர்கள் செய்வதற்கு இடத்தின் உரிமையாளர் ஒவ்வொருவரும், அந்த ஆய்வாளர் அல்லது நபருக்கு, எல்லா நியாயமான வசதிகளையும் அளித்தல் வேண்டும்; மற்றும் [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] அமைப்பைப் பொருத்துவதற்கான, அதில் கூடுதலாகச் சேர்ப்பதற்கான, அதனை மாற்றி அமைப்பதற்கான அல்லது பராமரிப்பதற்கான பணியானது, எந்த நபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அந்த நபரையோ அல்லது நிகழ்விற்கேற்ப ஆய்வின்போது ஆய்வாளர் அல்லது நபருக்கு பணியில் உதவியாக இருந்து வழிகாட்டுவதற்குத் தகுதியுடையவராக இருக்கிற அவருடைய பிரதிநிதியை, அவருடைய சொந்தச் செலவில், அந்த ஆய்வின் போது அழைத்து வந்து இருக்கச் செய்தல் வேண்டும்.

**13. விபத்துகளைப் பற்றிய அறிக்கை.–** [2][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] எதனையும் இயக்கி

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 12ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 14ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

வருவதில் விபத்து எதுவும் நேர்ந்து, அது உயிர்ச்சேதத்தினை அல்லது காயத்தினை விளைவித்து உள்ளபோது அல்லது பெரும்பாலும் விளைவிக்கக்கூடிய போது, அந்த இடத்தின் உரிமையாளர், அந்த விபத்து நடந்ததற்குப் பிறகு, கூடிய விரைவில், அவ்வாறு நடந்துள்ளது குறித்தும் உயிர்ச்சேதம் அல்லது காயம் ஏற்பட்டது குறித்தும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் விபத்தின் முழு விவரங்களுடனும் சேர்த்து, அறிவிப்பு ஒன்றை ஆய்வாளரிடமும், சென்னை, [1][மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி அல்லது திருப்பூர்] மாநகரக் காவல்துறை ஆணையரிடமும் மற்றும் வேறு எங்கேனும் என்றால் மாவட்ட நடுவரிடமும் அல்லது இதன்பொருட்டு ஆணையின் மூலம், அரசு, குறிப்பிடக்கூடிய பிற அலுவலரிடமும் கொடுத்தல் வேண்டும் மற்றும் அந்த [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] அமைப்பதில் எந்த வகையிலும் குறுக்கிடுதல் கூடாது மற்றும் ஆய்வாளரின் எழுத்து மூலமான அனுமதி இல்லாமல், அத்தகைய [1][மின்தூக்கி அல்லது இயங்கும்படிக்கட்டு] இயக்கம் மீண்டும் தொடங்கப்படுதல் கூடாது.

**14. ஆய்வாளருக்கு உதவி புரிதல்.–** (1) அரசு தேவையான எண்ணிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய தகுதிகளைப் பெற்றிருக்கின்ற, தொழில்நுட்ப வல்லுநர்களையும் பிற நபர்களையும் ஆய்வாளருக்கு உதவி புரிவதற்காக நியமிக்கலாம்.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 14ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(2) உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்டுள்ள நபர்களின் அதிகாரங்களும் அலுவல்களும் மற்றும் பணி குறித்த பிற வரையறைகளும், நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**15. தண்டம்.–** இந்தச் சட்டத்தின் வகை முறைகளில் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளில் ஏதொன்றையும் அல்லது ஆய்வாளரால் அல்லது அவருக்கு உதவி செய்வதற்காக பிரிவு 14இன்படி நியமிக்கப்பட்டுள்ள நபர் எவராலும் அளிக்கப்பட்ட அனுமதிக்கான அல்லது உரிமத்திற்கான அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரைக்கான வரையறைகளையும் நிபந்தனைகளையும் மீறுகின்ற எவர் ஒருவரும், ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கப்படக்கூடிய பணத்தண்டமும், தொடர்ந்து மீறுதல் செய்யப்படுவதைப் பொறுத்தவரையில், அவ்வாறு தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டதற்குப் பிறகு அத்தகைய மீறுகை தொடர்கிற ஒவ்வொரு நாளுக்கும், ஐம்பது ரூபாய் வரை நீடிக்கப்படக்கூடிய கூடுதல் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

**16. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்.–** (1) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருக்கும் போது, அக்குற்றச்செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தும்பொருட்டு, அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்தவரும் அதற்குப் பொறுப்பாக இருந்தவரும், அதோடுகூட அந்த நிறுமமும் அக்குற்றச் செயலைச் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும் அக்குற்றச்செயலானது

தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ அல்லது அக்குற்றச் செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டதாகவோ மெய்ப்பிப்பாரானால், அவரைத் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் எதுவும் நிறுமம் ஒன்றால் செய்யப்பட்டிருந்து, அக்குற்றச்செயலானது அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவர் ஒருவரின் இசைவுடனோ, மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டிருக்கின்றது அல்லது அவரது கவனக் குறைவு காரணமாக இருக்கின்றது என மெய்ப்பிக்கப்படும் போது அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர், அக்குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதோடு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படியே அவர் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்**.– இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,–

(a) "நிறுமம்" என்பது, கூட்டுருமம் எதுவும் எனப் பொருள்படும்; மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனி நபர்களின் குழுவையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) ஒரு நிறுவகம் தொடர்பாக, "இயக்குநர்" என்பது, நிறுவகத்தில் உள்ள கூட்டாளி ஒருவர் எனப் பொருள்படும்.

**17. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.–** இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதுவும் செய்யப்பட்டுள்ளதாகத் தமக்குத் தெரிய வந்துள்ள தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அதிகாரவரம்பைப் பெற்றுள்ள ஆய்வாளரால் செய்யப்பட்ட

முறையீடு ஒன்றின்பேரில் அல்லாமல், நீதிமன்றம் எதுவும், அக்குற்றச் செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

**18. அறிவிப்புகள், ஆணைகள் அல்லது ஆவணங்களைச் சார்வு செய்தல்.–** இந்தச் சட்டத்தினாலோ, அதன்படியோ, முகவரியிட்டு அனுப்ப வேண்டிய அல்லது அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அறிவிப்பு, ஆணை அல்லது பிற ஆவணம் ஒவ்வொன்றும், (இடத்தின் பெயர் குறிப்பிட்டு) இடத்தின் உரிமையாளருக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்–படுமானால், உரியவாறு முகவரியிட்டு அனுப்பப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்; மற்றும்,–

(a) உள்ளாட்சி அதிகாரஅமைப்பானது முகவரியாளராக இருக்கும் போது, அந்த உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் அலுவலகத்தில்;

(b) நிறுமம் ஒன்று முகவரியாளராக இருக்கும் போது, அந்நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது அந்நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இந்தியாவில் இல்லாதிருக்கும்போது, இந்தியாவில் உள்ள அந்நிறுமத்தின் தலைமை அலுவலக இடத்தில்; மற்றும்

(c) வேறு நபர் எவரும் முகவரியாளராக யிருக்கும் போது, அந்நபர் வழக்கமாக அல்லது கடைசியாக அறியப்பட்ட அவருடைய வசிப்பிடத்தில் அல்லது அலுவல் இடத்தில்,

அது அஞ்சல் வழியாக சார்பு செய்யப்படலாம் அல்லது விட்டுச் செல்லப்படலாம்.

**19. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட

அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

**20. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**.– இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில், அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவை என்றோ உகந்தவை என்றோ தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை** : ஆனால் அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டாண்டு காலஅளவு முடிவடைந்த பின்னர் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**21. காப்புரை.–** இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், 1910ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தின் (மையச் சட்டம் IX/1910) மற்றும் 1948ஆம் ஆண்டு மின்சார (வழங்குகை)ச் சட்டத்தின் (மையச் சட்டம் LIV/1948) வகைமுறைகளைப் பாதித்தல் கூடாது.

**22. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**.–(1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு ஊறின்றியும், அத்தகைய விதிகள்,–

(a) [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டு களுக்கான] குறிப்பிடப்பட்ட பணி விவர அளவுகளுக்கு;

(b) [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டுகள்] அமைப்பதற்கான வரைபடங்கள் அனுப்பப்படுகின்ற முறைக்கு;

(c) எந்த முறையில் [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டு] சோதனை செய்யப்படலாம் என்பதற்கு;

(d) [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டு] ஒன்றை அமைப்பதற்கான விண்ணப்பத்தின் படிவத்திற்கு மற்றும் அந்த [1][மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டு] இயக்கி வருவதற்கான உரிமத்திற்கு;

(e) பிரிவு 4இன் உட்பிரிவு (4)இன்படி அனுப்பப்பட வேண்டிய பணி நிறைவு அறிவிப்பின் படிவத்திற்கு;

[1][(f) மின்தூக்கி மற்றும் இயங்கும்படிக்கட்டின் செயல்பாட்டிற்காக உரிமம் வழங்கப்படுவதற்கான வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் வழங்கப்பட வேண்டிய படிவம்;

(ff) பிரிவு 4இன்படி அனுமதிக்கான விண்ணப்பம் ஒன்றைப் பொறுத்து செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், பிரிவுகள் 5 மற்றும் 6இன்படி உரிமத்திற்கான விண்ணப்பம் ஒன்றைப் பொறுத்து செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், பிரிவு 10இன்படி அதிகாரமளிப்பிற்கான விண்ணப்பம் ஒன்றைப் பொறுத்து, செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் அத்தகைய கட்டணங்கள் செலுத்தப்படவேண்டிய முறைகள்; வெவ்வேறு வகைகளிலான மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகளுக்கு கட்டணங்கள் வெவ்வேறாக இருக்கலாம்;

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 15ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(g) [1][மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்] இயக்கிவரப்பட வேண்டிய முறை மற்றும் அதற்கு வேண்டிய வரையறைகள்;

(h) விபத்துக்களைப் பற்றி அறிவிப்பு கொடுக்க வேண்டிய முறை;

(i) விபத்துக்களைப் பற்றி பிரிவு 13இன்படி கொடுக்கப்பட வேண்டிய அறிவிப்பின் படிவம்; மற்றும்

(j) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படும் பிற விவரம்,

ஆகியவற்றிற்கு வகைசெய்யலாம்.

**23. விதிகள், ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் சட்டமன்றப்பேரவை முன்பு வைக்கப்படுதல்.**– (1) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும், பிரிவு 20இன்படி பிறப்பிக்கப்படும் ஆணைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப் பட்டிருந்தாலன்றி, அவை எந்தத் தேதியில் வெளியிடப்படுகின்றனவோ அந்தத் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்படும் அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை எந்தத் தேதியில் வெளியிடப்படுகின்றனவோ, அந்தத் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

---

1. 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (சட்ட எண் 29/2017) பிரிவு 15ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் மற்றும் வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் மற்றும் பிரிவு 20இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்டதற்கு அல்லது வெளியிடப்பட்டதற்கு அல்லது பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடியவிரைவில், சட்டமன்றப்பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர், சட்டமன்றப்பேரவை அத்தகைய விதியில் அல்லது அறிவிக்கையில் அல்லது ஆணையில் மாற்றம் எதனையும் செய்யுமானால் அல்லது அவ்விதி செய்யப்படவோ அல்லது அறிவிக்கை வெளியிடப்படவோ அல்லது ஆணை பிறப்பிக்கப்படவோ கூடாது என்று சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமானால், அவ்விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது, அதற்குப்பின்பு அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அல்லது அது நடைமுறைக்கு வாராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது நடைமுறைக்கு வாராதுபோவது எதுவும், அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.